தமிழ் முரசு

ஈரோடு, திருப்பூர் வழியே செல்லும்

பெங்களூரு- திருவனந்தபுரம் வடக்கு சிறப்பு ரயில் 2 மாதத்திற்கு நீட்டிப்பு

ரயில்வே நிர்வாகம் அறிவிப்பு

கோவை, அக். 1-

ஈரோடு, திருப்பூர் வழியே செல்லும் பெங்களூரு-திருவனந்தபுரம் வடக்கு வாராந்திர சிறப்பு ரயில், மேலும் 2 மாதத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் முக்கிய வழித்தடங்களில் இயங்கும் ரயில்களில் பயணிகள் கூட்டம் அதிகளவு இருப்பதால், சிறப்பு ரயில்களை ரயில்வே நிர்வாகம் இயக்குகிறது. இந்தவகையில், பெங்களூரு-திருவனந்தபுரம் வடக்கு இடையே சேலம், ஈரோடு, திருப்பூர் வழியே வாராந்திர சிறப்பு ரயில் (06555, 06556), இரு மார்க்கத்திலும் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயிலின் இயக்க காலம் முடிவடைய இருந்த நிலையில், மேலும் 2 மாதத்திற்கு, அதாவது நவம்பர் வரை நீட்டித்து ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. இதன்படி, பெங்களூரு- திருவனந்தபுரம் வடக்கு வாராந்திர சிறப்புரயில் (06555), நாளை (2ம் தேதி) முதல் நவம்பர் 27ம் தேதி வரை வெள்ளிக்கிழமை தோறும் (9 சேவை) நீட்டித்து இயக்கப்படுகிறது. பெங்களூருவில் இரவு 10 மணிக்கு புறப்பட்டு, கிருஷ்ணராஜபுரம், பங்காருபேட்டை வழியே சேலத்திற்கு அடுத்தநாள் அதிகாலை 2.15 மணிக்கு வந்தடைகிறது. பிறகு ஈரோட்டிற்கு அதிகாலை 3.15க்கும், திருப்பூருக்கு அதிகாலை 4.03க்கும், போத்தனூருக்கு அதிகாலை 4.58க்கும் சென்று, பாலக்காடு, திருச்சூர், ஆலுவா, எர்ணாகுளம் வடக்கு, கோட்டயம், கொல்லம் வழியே திருவனந்தபுரம் வடக்கு ஸ்டேஷனுக்கு மதியம் 2 மணிக்கு சென்றடைகிறது.மறுமார்க்கத்தில், திருவனந்தபுரம் வடக்கு-கோவை வாராந்திர சிறப்பு ரயில் (06556), வரும் 4ம் தேதி முதல் நவம்பர் 29ம் தேதி வரை ஞாயிறு தோறும் (9 சேவை) நீட்டித்து இயக்கப்படுகிறது. திருவனந்தபுரம் வடக்கில் மதியம் 2.15 மணிக்கு புறப்பட்டு, கோட்டயம், எர்ணாகுளம், பாலக்காடு வழியே போத்தனூருக்கு இரவு 10.58க்கும், திருப்பூருக்கு இரவு 11.53க்கும், ஈரோட்டிற்கு நள்ளிரவு 12.50க்கும், சேலத்திற்கு அடுத்தநாள் அதிகாலை 1.47க்கும் வந்து, பாங்காருபேட்டை வழியே பெங்களூருக்கு காலை 8.15மணிக்கு சென்றடைகிறது. இந்த ரயில் சேவையை பயணிகள் பயன்படுத்திக் கொள்ள தெற்கு ரயில்வே நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

கோவை கொடிசியா அருகே அவிநாசி சாலையில் ஆங்காங்கே இரும்பு தடுப்புகள் வைத்து பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் பணி நடந்து வருகிறது. இதனால் வாகன ஓட்டிகள் கவனமுடன் செல்ல அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு

கோவை, அக். 1-

உலக புற்றுநோய் மாதத்தையொட்டி கோவை ஸ்ரீராமகிருஷ்ணா புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், மார்பகப் புற்றுநோய் மற்றும் மார்பக நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "தி பிங்க் பாதை" என்ற விழிப்புணர்வு தொகுப்பு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்பட்டது.



கோவை மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் முன்னிலையில் தொகுப்பை அறிமுகப்படுத்திவைத்தார். அறக்கட்டளையின் தலைமை செயல் அதிகாரி ராம்குமார், தலைமை நிர்வாக அதிகாரி மகேஷ்குமார், ராமகிருஷ்ணா மருத்துவமனை மருத்துவ இயக்குநர் டாக்டர் ராஜகோபால் மற்றும் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் அழகப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். "தி பிங்க் பாதை" மூலம் மார்பகப் புற்றுநோய் குறித்த பல்வேறு தகவல்கள் பொதுமக்களுக்கு எளிய முறையில் விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது. புற்றுநோயியல் நிபுணர் டாக்டர் பி.குகன், மார்பக புற்றுநோய் குறித்து பேசினார். டாக்டர் கே.கார்த்திகேஷ் நன்றி கூறினார்.

ஆனைமலையில்

தூய்மை பணியாளர்கள் நல சிறப்பு முகாம்

ஏராளமானோர் பங்கேற்பு

பொள்ளாச்சி, அக. 1-

பொள்ளாச்சியை அடுத்த அடுத்த ஆனைமலை அருகே வேட்டைக்காரன்புதூரில் உள்ள ஒரு மண்டபத்தில் நேற்று, தூய்மை பணியாளர்கள் நல சிறப்பு முகாம் நடைபெற்றது. பேரூராட்சி செயல்அலுவலர்கள் தாஜ் நிசா, அப்துல்லா, ரஞ்சித், சசிகலா உள்ளிட பலர் கலந்துகொண்டனர்.

இந்த முகாமில், ஆனைமலை மற்றும் வேட்டைக்காரன்புதூர், ஓடையக்குளம், இந்த முகாமில், கோட்டூர், சமத்தூர் பேரூராட்சி பகுதிகளை சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பல்வேறு வகையான மருத்துவ பரிசோதனை, அரசு திட்டங்கள் பதிவு, அடையாள அட்டை பெறுவதற்கான பதிவுசெய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதை தொடர்ந்து, தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும், தூய்மை பணியின்போது பயன்படுத்தவேண்டிய கை கிளவுஸ், மாஸ்க், கண்ணாடி, கால் உரை உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டு, தூய்மை பணியின்போது மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டன.

குடியிருப்புக்குள் புகுந்த 4 காட்டு யானைகள்

சமையல் அறை துவம்சம்

வால்பாறை, அக். 1-

வால்பாறை பகுதியில் அதிகாலை நேரத்தில் 4 காட்டு யானைகள் குடியிருப்புக்குள் புகுந்து சமையல் அறையை உடைத்து சேதப்படுத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வால்பாறை உருளிக்கல் எஸ்டேட் அலுவலக அலுவலர் காட்வீன் என்பவரது குடியிருப்பு பகுதிக்குள் அதிகாலை நேரத்தில் 4 காட்டு யானைகள் புகுந்துள்ளன. சமையல் அறையின் கதவு மற்றும் பாதுகாப்பு கம்பிகளை உடைத்து உள்ளே சென்ற யானைகள், அங்கிருந்த அடுப்பு, சமையல் பாத்திரங்கள் மற்றும் உணவுப் பொருட்களை சேதப்படுத்தியுள்ளன. சமையல் அறை முழுவதும் பொருட்கள் சிதறிக் கிடக்கும் நிலையில் உள்ளது. யானைகள் குடியிருப்புக்குள் நுழைந்து சமையல் அறையை உடைத்த காட்சிகள் அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளன.

வால்பாறை அடுத்துள்ள உருளிக்கல் எஸ்டேட்டில் காட்டு யானைகள் சூறையாடிய அலுவலர் குடியிருப்பு சமையல் அறை.

உருளிக்கல் எஸ்டேட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சம்பவம், யானைகளின் பருவகால நடமாட்டம் தொடங்கியுள்ள நிலையில் எஸ்டேட் குடியிருப்புகள், சமையல் அறைகள் மற்றும் உணவுப்பொருட்கள் சேமிக்கப்படும் இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே தீவிரப்படுத்த வேண்டிய தன் அவசியத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

சாக்கடையில் இறந்து கிடந்த வடமாநில வாலிபர்

கோவை, அக். 1-

சாக்கடையில் இறந்து கிடந்த வடமாநில வாலிபர் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஒடிசா மாநிலம், கஜபதி மாவட்டத்தை சேர்ந்தவர் அபாஸ் மச்சா (31). இவர், கோவையில் உள்ள சரவணம்பட்டியில் தங்கி கட்டிட வேலை செய்து வந்துள்ளார். இவருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் நேற்று காலை அபாஸ் மச்சா புளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் பள்ளி அருகே சாக்கடையில் இறந்து கிடந்துள்ளார். இதை கண்டு அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் ராமநாதபுரம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து அபாஸ் மச்சா உடலை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து போலீசார் விசாரித்து திருப்பூரில் வேலை செய்துவரும் அபாஸ் மச்சா உறவினரான ஆனன்லிமா (33) என்பவருக்கு, தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து திருப்பூரிலிருந்து கோவைக்கு விரைந்து வந்த ஆனன்லிமா, இறந்து கிடப்பது தனது உறவினர் அபாஸ் மச்சா தான் என்பதை அடையாளம் கண்டறிந்தார். இதை தொடர்ந்து ராமநாதபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து அபாஸ் மச்சா மது போதையில் சாக்கடையில் தவறிவிழுந்து உயிரிழந்தாரா அல்லது வேறு ஏதாவது காரணமா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

தூக்கிட்டு வாலிபர் தற்கொலை

கோவை, அக். 1-

கோவை சரவணம்பட்டியை சேர்ந்தவர் 30 வயது வாலிபர். இவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆண்மை குறைபாட்டால் அவதிப்பட்டு வந்துள்ளார். அதற்காக அவர் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்த போதிலும், அதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என தெரிகிறது. இதனால் மனைவியின் வாழ்க்கை பாழாகிவிடுவதாகவும், தன்னை விட்டு விட்டால் அவர் நன்றாக வாழலாம் என்றும் அந்த வாலிபர் அடிக்கடி தனது மனைவியிடம் புலம்பி வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த வாலிபர் தனது மனைவியை வேலை செய்யும் இடத்தில் விட்டுவிட்டுச் வீட்டிற்கு திரும்பினார். அன்று மதியம் அவரது மனைவி அவரைத் போனில் தொடர்பு கொண்டு பேசியபோது, அவர் மிகவும் மனமுடைந்த நிலையில் பேசியுள்ளார். பின்னர் இரவு அவரது மனைவி வேலை முடிந்து வீடு திரும்பினார். அப்போது, வீட்டிற்குள் சென்று பார்த்தபோது வாலிபர் தூக்கில் இறந்து கிடந்தார்.

அக்டோபர் 1, 2026 வியாழக்கிழமை

பெரும் துயர் தவிர்ப்பு

ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாயில் இருந்து நேற்று காலை, இஸ்ரேல் தலை நகர் டெல் அவிவ் நகருக்கு, 'பிளைதுபாய்' நிறுவனத்தின் விமானம் புறப்பட்டது; இதில், 180 பயணியர் இருந்தனர். இந்த விமானம், சவுதி அரேபியா வான்பரப்பில் பறந்தபோது, திடீரென கடத்தப்பட்டதை குறிக்கும் '7500' குறியீடுகளை அனுப்பியது .

இதையடுத்து, 34 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த விமானம் 2 நிமிடங்களுக்குள், 17 ஆயிரத்து 400 அடி கீழ்நோக்கி இறங்கியது. இது கடத்தல் முயற்சியாக இருக்கலாம் என்ற அவசர தகவலைத் தொடர்ந்து, உடனடியாக இஸ்ரேல் விமானப்படை உஷார்படுத்தப்பட்டது.

விமானத்தில் இருந்த விமானியை ஓமனைச் சேர்ந்த துணை விமானி கத்தியால் குத்தியதாக கூறப்படுகிறது. பயணிகள் தலையிட்டு, துணை விமானியை பிடித்தனர்.

அதே விமானத்தில் சாதாரண உடையில் பயணித்த வேறு இரண்டு விமானிகள், விமானத்தை இயக்கினர்; சவுதி அரேபியாவில் உள்ள தபுக் விமான நிலையத்தில் விமானத்தை அவசரமாக தரையிறக்கினர். விமானி கத்திக்குத்து காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார். பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர் என சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

விமானத்தில், துணை விமானியால் கத்தியால் குத்தப்பட்டும், பயணிகள் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் திறம்படச் செயல்பட்டு விமானத்தை இயக்கியவர், இந்தியாவை சேர்ந்த சுமித் மச்சகார் என்பது தெரியவந்துள்ளது. இவர், இந்தியாவை சேர்ந்த தனியார் விமான நிறுவனத்தில் 11 ஆண்டுகள் பணியாற்றி உள்ளார். கடந்த 2022ல் தான், பிளை துபாய் நிறுவனத்தில் சேர்ந்துள்ளார்; போயிங் உட்பட பல விமானங்களை, 9,750 மணி நேரம் இயக்கிய அனுபவம் பெற்றவர்.

இச்சம்பவம் குறித்து,'விமானத்தில் பயணித்த 180 பேரில், 100 பேர் இஸ்ரேலைச் சேர்ந்தவர்கள். விமானியை கத்தியால் குத்தி, விமானத்தை தன் கட்டுப்பாட்டில் எடுக்க துணை விமானி முயன்றுள்ளார். விமானத்தை இஸ்ரேலில் உள்ள கட்டடங்கள் மீது மோத வைக்கவும் அவர் திட்டமிட்டிருந்தார். இது, பயங்கரவாத தாக்குதலுக்கான முயற்சி' என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'இந்திய விமானி ஸ்மித் மச்சார் ஒரு உண்மையான ஹீரோ. உயிருக்கு ஆபத்தான நிலையிலும் அவர் காட்டிய அசாத்திய தைரியமும் சமயோசித புத்தியும் பெரும் பேரழிவைத் தடுத்துள்ளது. அவருடன் இணைந்து போராடிய வீரர்களுக்கும் எனது சல்யூட்' எனப் பாராட்டினார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், நெதன்யாகுவுடன் தொலைபேசியில் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'இந்திய விமானி உண்மையிலேயே ஒரு மிகப்பெரிய ஹீரோ. சக விமானி கத்தியால் தாக்கியபோதும் துணிச்சலாகப் போராடி விமானத்தை நிலைநிறுத்த உதவியுள்ளார். நடுவானில் மாபெரும் துயரம் தவிர்க்கப்பட்டுள்ளது,' எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் சமீபத்தில் நடந்த ஐ.நா., பொதுச்சபை கூட்டத்தில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பேசுகையில்,

'மேற்காசிய போர் விவகாரத்தில், இஸ்ரேல் மீது மேற்காசிய நாடுகள் தொடர்ந்து பொய் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றன. அமெரிக்காவில், 2001ல் நடந்த இரட்டை கோபுரத் தாக்குதல் போல, விமானங்களை கடத்தி, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக உளவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன' என்று பேசியிருந்தார். இந்த சூழலில் இந்த சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திருப்பூர் பெருமாநல்லூர் முட்டியான் கிணறு பகுதியில் உள்ள நிழற்குடை உரிய பராமரிப்பு இல்லாமல் புதர்மண்டி காணப்படுகிறது.

ஒரு கட்சியின் வெற்றியைத் திருடி ஆட்சி அமைப்பது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்

தவெக வேட்பாளரின் நீலிக்கண்ணீர் மக்களை ஏமாற்ற நடந்த ஓரங்க நாடகம்

தாராபுரத்தில் இன்பதுரை எம்பி பேட்டி

தாராபுரம், அக். 1-

ஒரு கட்சியின் வெற்றியைத் திருடி ஆட்சி அமைப்பது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் தவெக வேட்பாளரின் நீலிக்கண்ணீர் நாடகம், மக்களை ஏமாற்ற நடந்த ஓரங்க நாடகம் என தாராபுரத்தில் இன்பதுரை எம்பி கூறினார்.

தாராபுரத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தாராபுரத்தில் நடைபெற்றது தேர்தல் பிரசாரம் அல்ல; ஒரு நபர் நாடகமாகும். தவெக வேட்பாளர் நீலிக்கண்ணீர் வடித்துள்ளார். கடந்த தேர்தலில் இந்தத் தொகுதி மக்கள் அதிமுகவுக்குத்தான் வாக்களித்தனர். ஆனால், இன்று தொகுதி மக்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டதாகக் கூறி ரத்தக் கண்ணீர் வடித்து வருகின்றனர்.

தவெக நிர்வாகி ராஜ் மோகன் பேசிய பிறகுதான் வேட்பாளர் நன்றாகப்பேசி, பின்னர் அழுதுள்ளார். இது கண்ணீர் பூக்கள் அல்ல; கண்ணீர் நாடகம். அவர் தனது ஆட்சியில் செய்த சாதனைகள் என்ன என்பதை எடுத்துக்கூறவில்லை. எதற்காக அவருக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதையும் விளக்கவில்லை. திமுகவை விமர்சிப்பதைத் தவிர அவரது பேச்சில் வேறு எதுவும் இல்லை.

அரசியல் கட்சியில் இணைந்தால் அரசியல்தான் செய்ய முடியும். நாடகக் கம்பெனியில் இணைந்தால் நாடகம்தான் போட முடியும். தாராபுரத்தில் ஏற்பட்டுள்ள இந்தக் கண்ணீர் சம்பவமும் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட கண்ணீர் நாடகமாகவே தெரிகிறது. இவர் நீலி கண்ணீர் வடிப்பதற்காக ஊருக்கு வெளியே மேடை போட்டு நாடகத்தை நடத்த வேண்டியதன் காரணம் என்ன? தொகுதி மக்கள் ரோசக்காரர்கள். ஒருவர் கூட அந்த பொதுக்கூட்டத்துக்கு செல்லவில்லை. தென் மாவட்ட பகுதிகளில் இருந்தும் ஈரோடு பகுதிகளில் இருந்தும் ஆட்களை கூட்டி வந்து இந்த நாடகத்தை அரங்கேற்றம் செய்துள்ளனர். பின்னால் நிற்கும் ஒரு அமைச்சர் போனில் வந்த தகவலை கேட்டு இவரது காதுகளில் கிசுகிசுப்பாராம். உடனே பேசிக்கொண்டிருந்த வேட்பாளர், டிராபிக் மாறி உடனே நான் என்ன தவறு செய்தேன் என்று பலம்பெரும் நடிகை கண்ணாம்பாளின் வசனத்தை பேசுகிறார். அது மட்டுமா உடனே நீலிக் கண்ணீர் வடிக்கிறார் பக்கத்தில் நிற்கும் விஜய், அவர் தோள்களைப் பிடித்து தட்டிக்கொடுத்து ஆறுதல் கூறுகிறார். இந்த நாடகங்களை எல்லாம் நம்புவதற்கு தொகுதி மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல. ஒரு கட்சியின் வெற்றியைத் திருடி ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம். கரூர் வழக்கில் சிபிஐ விசாரணை நடைபெற்று வருகிறது. அந்த விசாரணையில் உண்மைகள் வெளிவரும்; நாடகக் கம்பெனியின் முகத்திரையும் கிழியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இன்பதுரை எம்பி

Truhome FINANCE

ட்ரூஹோம் நிதி லிமிடெட் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்)

தலைமை அலுவலகம்: நிலை–3, வோக்ஹார்ட்த் டவர்ஸ், கிழக்கு விங் C–2 பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை 400 051; **தொலைபேசி:** 1800 102 4345; **இணையதளம்:**http://www.truhomefinance.in

பதிவு அலுவலகம்:ஸ்ரீநிவாசா டவர், முதல் தளம், கதவு எண்.5, பழைய எண்.11, 2வது லேன், செனடாப் சாலை, ஆழ்வார்பேட்டை,தேனாம்பேட்டை, சென்னை–600 018

பிற்சேர்க்கை-IV-A [விதி 8(6) விதிமுறையை காண்க] **அசையாச் சொத்துகள் விற்பனைக்கான ஏல அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது ட்ரூஹோம் நிதி லிமிடெட் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்) வசம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ட்ரூஹோம் நிதி லிமிடெட்டின் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும், கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்துகள் ஆனது, அட்டவணையில் குறிப்பிட்டவாறு, கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் வசமிருந்து ட்ரூஹோம் நிதி நிறுவனத்திற்குரிய (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்) பாக்கி நிலுவைத்தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் 17.10.2026 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 1:00 மணிக்குள் மின்–ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள், நிலுவைத்தொகை, அசையாச் சொத்தின் குறு விவரம், நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை மற்றும் பார்வையிடும் தேதி ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர்கள்/உப–கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர்	மீட்புத் தொகை மற்றும் கோரிக்கை அறிவிப்பின் தேதி	நிர்ணய விலை (ரூ.) & ஏலம் உயர்த்தும் தொகை	ஏலத் தேதி & நேரம்	தொடர்பு நபர் விவரங்கள் – (AO மற்றும் அகற்றல் குழு)
திரு. சுரேஷ்குமார் D, த/பெ துரை எண் 17/E கணபதி லேஅவுட், KK புதூர் கோயம்புத்தூர் - 641038 **திருமதி. லட்சுமி, க/பெ சுரேஷ்குமார் எண் 17/E கணபதி லேஅவுட், KK புதூர் கோயம்புத்தூர் - 641038** **சுவாதீனம் நாள் & வகை** 23.09.2026 & கையக சுவாதீனம் **தெரிந்த வில்லங்கங்கள்** தெரிந்தது இல்லை	கோரிக்கை அறிவிப்பு தேதி: 07.11.2024 ரூ.1,10,68,215/– (ரூபாய் ஒரு கோடியே பத்து லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்) 06–11–2024 தேதியன்று, கடன் கணக்கு எண். SLPHCOIM0000777 இன் தொடர்பாக ஒப்பந்த விகிதத்தில் மேலும் வட்டியுடன், மேற்கூறிய அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.	ரூ. 1,10,00,000/– (ரூபாய் ஒரு கோடியே பத்து லட்சம் மட்டும்) **ஏலம் உயர்த்தும் தொகை:** ரூ.25,000/–மற்றும் அதன் மடங்குகளில் **முன்வைப்புத்தொகை (EMD) (ரூ.)** ரூ. 11,00,000 (ரூபாய் பதினொன்று லட்சம் மட்டும்) முன்வைப்புத்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி: 16.10.2026 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை.	17 அக்டோபர் 2026 & ஏல நேரம்: காலை 11:00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை	திரு.S.ஜேம்ஸ் கிளமெண்ட் 7200281906 திரு. M.செல்வகுமார் 9444224367 திரு. L.முரளி– 7904688478 சொத்து பார்வையிடும் நாள்: 09.10.2026 பார்வையிடும் நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

சொத்து விவரம்

அனைத்து துண்டு மற்றும் பகுதி கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் துணைப்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, சங்கனூர் கிராமம், SF எண். நிலத்துடன் கூடிய கட்டிடத்துடன் சொத்து அமைந்துள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு: மேற்கு: நாச்சிகோனார் நிலம், கிழக்கு: ராமசாமி முதலியார் நிலம், வடக்கு : குணவதியம்மாள் ஜகா, தெற்கு: 24 அடி அகலமுள்ள கிழக்கு மேற்கு சாலை. சொத்தின் மொத்த பரப்பளவு 1610 சதுர அடி அல்லது 3 ½ சென்ட்கள் 86 சதுர அடி அல்லது 149.58 சதுர மீட்டர் ஆகும். வருவாய் பதிவேட்டின்படி தற்போதைய T.S. எண். 164, வார்டு எண். Q (17), பிளாக் எண். 5. இச்சொத்து சின்னம்மாள் தெருவில் அனைத்து பயன்பாடுகள் மற்றும் வழித்தட உரிமைகளுடன் அமைந்துள்ளது.

1) விற்பனை தொடர்பான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ட்ரூஹோம் நிதி லிமிடெட்டின் இணையதள லிங்க்: https://www.truhomefinance.in/e–auction/ மற்றும் ஏல சேவை வழங்குநரின் இணையதள முகவரி: https://www.bankeauctions.comஐ பார்வையிடவும்.
2) ஏலத்தில் பங்கேற்கும் ஏலதாரர்கள் தங்கள் முன்வைப்புத்தொகையை RTGS/NEFT மூலம் டெபாசிட் செய்ய இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு விவரங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்: வங்கி பெயர்: ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட், கிளை: பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், மும்பை வங்கி கணக்கு எண். நடப்புக் கணக்கு எண். 911020045677633 IFSC குறியீடு: UTIB0000230.

இடம்: கோயம்புத்தூர்
நாள்: 01–10–2026

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி–ட்ரூஹோம் நிதி லிமிடெட் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்)

Printed & Published by **Mr. Syed Mohamed,** on behalf of M/s. Kal Publications Pvt Ltd. and Printed at Murasu Offset Press No.1, Vincent Road, Coimbatore-641001 and Published at No.1, Vincent Road, Coimbatore-641001.
Editor: Mr. Syed Mohamed, RNI Regn: TNTAM/2005/51848 Phone: 0422 4467676, Advt: 0422 4467655, E-mail: tmurasucbe@gmail.com